<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 2, குழித்துறை</u>

சிசி. 397/2024

அரசு தரப்பு சாட்சி : அ. சா. 3

| | |
|---|---|
| பெயர் | : திரு. விஜய் |
| தகப்பனார் பெயர் | : |
| கிராமம் | : |
| தாலுகா | : |
| மதம் | : |
| தொழில் | : |
| வயது | : |
| நாள் | : 17.07.2026 |

2023ம் வருடத்திய சாட்சிய சட்டத்தின்படி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**எதிரி ஆஜர்.**

**<u>முதல் விசாரணை ..</u>**

நான் மேற்கண்ட முகவரியில் எனது குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் கொத்தனராக வேலை செய்து வருகிறேன். கடந்த 10.08.2024ம் தேதி மதியம் 02.45 மணியளவில் நானும் எனது அண்ணன் ஷிபுவும் புதுக்கடை காவல் குடியிருப்புக்கு எதிர்புறம் கொத்த வேலை செய்து கொண்டிருந்தோம். அப்போது எனது பெரியப்பா செல்வராஜ் தேங்காய்பட்டிணத்திலிருந்து வெட்டுமணி செல்லும் ரோட்டில் தெற்கிலிருந்த வடக்கு திசையை நோக்கி நடந்து வந்து கொண்டிருக்கும் போது அவருடைய பின்னால் அதே திசையில் வேகமாகவும் , ஆரன் அடிக்காமல் TN 74AP7211 என்ற பதிவெண் கொண்ட ே ஹாண்டா சிட்டி காரானது மோதியதில் அவர் கீழே விழுந்து தலையில் ரத்த காயம் ஏற்பட்டது. அதை பார்த்த நானும், எனது அண்ணன் ஷிபுவும் மற்றும் அருகில் இருந்தவர்களும் சேர்ந்து எனது பெரியப்பா செல்வராசை ஆட்டோவில் ஏற்றி அருகில் இருந்த மெக்னா மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். தலையில் எனது பெரியப்பாவிற்கு பலத்த காயம் ஏற்பட்டதால் அவரை மார்த்தாண்டத்திலுள்ள ஐசக் மருத்துவமனைக்கு கொண்டு செல்லுமாறு கூறினார்கள். பின்பு நானும் எனது அண்ணனும் எனது பெரியப்பாவை ஐசக் மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அவர்கள் எம்ஆர்ஐ ஸகேன் எடுத்து பார்த்து விட்டு தலையில் நல்ல காயம் இருந்ததால் சுங்காங்கடையிலுள்ள முத்துநீரோ மருத்துவமனைக்கு அழைத்து கொண்டு செல்ல சொன்னார்கள். பின்பு மறுநாள் அங்கு அவர் சுயநினைவு இல்லாமல் இருக்கும் போது புதுக்கடை காவல் நிலையத்திலிருந்து காவலர்கள் என்னை விசாரிக்க வந்தார்கள். அப்போது

எனது அண்ணன் ஷிபு நடவடிக்கை எடுக்க புகார் மனு கொடுத்தார். மேற்படி TN 74 AP 7211 என்ற விபத்தை ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டி வந்தது ஆஜர் எதிரி தான். இந்த வழக்கு சம்பவம் தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை இல்லை.**